[பேரவைத் துணைத் தலைவர்] [1973 ஏப்ரல் 5

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 174-வது விதியின்கீழ் திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) 1973-74-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1973-74-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க் கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கின்றேன் :—

1. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
2. திரு. சி. ஆறுமுகம்.
3. திரு. கே. ஆண்டி என்கிற குருசாமி.
4. திரு. கே. கந்தசாமி.
5. திரு. கா. காளிமுத்து.
6. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)
7. திரு. கே. என். குமாரசாமி.
8. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்.
9. திரு. சி. சின்னவெள்ளையன்.
10. திரு. பொ. பத்மநாபன்.
11. திரு. எ. பாலையா.
12. திரு. கே. ரங்கநாதன்.
13. திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன்.
14. திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்.
15. திரு. எஸ். வடிவேல்.
16. திரு. மு. வேதாசலம்.

1973 ஏப்ரல் 5] [பேரவைத் துணைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1973-74-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், பொதுக்கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 165-வது விதியின்கீழ் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) 1973-74-ம் ஆண்டுக்கான (1) மதிப்பீட்டுக் குழு (2) பொதுக் கணக்காய்வுக் குழு (3) சட்டப் பேரவை சட்டவிதிகள் ஆய்வுக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள் நியமனம் பற்றி மேலவைத் தலைவரது செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றன என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன் :—

1973-74-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. புலவர் ஓ. அறிவுடைநம்பி.
2. திரு. நாகூர் ஈ. எம். அனிபா.
3. திரு. பி. திருஞானசம்பந்தம்.
4. திரு. எஸ். வெள்ளபாண்டியன்.
5. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.

1973-74-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. கே. ராசாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.